2009 ஜூலை 3]

போடப்பட்டிருக்கின்றன. தங்களைப்போன்று கனமாக இருப்பவர்களுக்கு அது சிரமமாக இருக்குமானால், இப்போது சட்டமன்ற உறுப்பினர்கள் வருகின்ற பேருந்துகளில் அந்த ஒரு சீட்டை எடுத்துவிட்டு அனைவரும் நன்றாகச் சமமாக உட்காருகின்ற வகையிலே இன்றைக்கே செய்யச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 82, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

82—

ஆட்டுப் பண்ணை

***34599—திரு. என்.ஆர். ரெங்கராஜன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டையில் ஆட்டுப் பண்ணை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பட்டுக்கோட்டையில் ஆட்டுப் பண்ணை துவக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன்.*

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை பகுதி, விவசாயத்தையே முழுவதுமாக நம்பியிருக்கக்கூடிய பகுதி ஆகும். பல்வேறு இடங்களுக்கு நான் சென்று பார்த்தபோது, நிறைய இடங்களில், குறிப்பாக சேலம், ஆத்தூர் போன்ற பகுதிகளிலே ஆடு வளர்ப்பு மிகுந்த இலாபகரமான தொழிலாக இருப்பதாகக் கூறினார்கள். அதனடிப்படையில், தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், பட்டுக்கோட்டையில் இதுபோன்று ஒரு பண்ணையை அமைத்து, அதன்மூலமாக நல்ல*

கலப்பின ஆடுகளை உருவாக்கி விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அளித்தீர்கள் என்றால் அவர்களுடைய வாழ்க்கைத் தரம் இதன்மூலம் உயர்வதற்கு உத்தரவாதமாக இருக்கும். எனவே, நமது அரசு அதற்கான நடவடிக்கையை அவசியம் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று நியூசிலாந்து நாட்டில் ஆடு வளர்ப்பு மிகுந்த இலாபகரமான தொழிலாக அமைந்து அங்கு அதை நவீன, விஞ்ஞான முறையிலே சிறப்பாகச் செய்துகொண்டிருக்கிறார்கள். எனவே, சட்டமன்ற உறுப்பினர்களைக்கொண்டு ஒரு குழுவை அமைத்து நியூசிலாந்திற்கு அனுப்பி ஆய்வு மேற்கொண்டு, அதைப்போன்று இங்கு அமைக்க ஏற்பாடு செய்வதற்கு ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சரிடம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 9-45

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரத்தநாடு மற்றும் ஈச்சங்கோட்டையில் மாவட்ட கால்நடைப் பண்ணைகள் இயங்கி வருகின்றன. இப்பண்ணைகளில் ஆடுகள், மாடுகள் வைத்துப் பராமரிக்கப்பட்டு, அங்குள்ள கால்நடை வளர்ப்போருக்கு மாதிரிப் பண்ணைகளாகச் செயல்பட்டு வருகின்றன. மேலும், தற்போது மாநிலத்தில் 11 அரசுப் பண்ணைகள், மாதிரிப் பண்ணைகளாக இயங்கி வருகின்றன. இப்பண்ணைகள் மூலமாக கால்நடைப் பராமரிப்பு மேலாண்மை, தீவனப் பயிர் வளர்ப்பு போன்றவற்றில் மக்கள் விழிப்புணர்வு பெறுகின்றனர். தற்போது செயல்பட்டுவரும் அரசுப் பண்ணைகளே மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யப் போதுமானவையாக உள்ளன. கடந்த 20 ஆண்டுகளாக புதிதாக அரசு கால்நடைப் பண்ணைகள் துவங்கப்படவில்லை. மேலும், பட்டுக்கோட்டையில் ஆட்டுப் பண்ணை அமைத்திடப் போதிய அளவுக்கு கால்நடை பராமரிப்புத் துறைக்குச் சொந்தமான மேய்ச்சல் நிலம் ஏதும் இல்லை. எனவே, தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரத்தநாடு மற்றும் ஈச்சங்கோட்டையில் பண்ணைகள் இயங்கி வருவதால், அதே மாவட்டத்திலுள்ள பட்டுக்கோட்டையில் மற்றொரு ஆட்டுப் பண்ணை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

2009 ஜூலை 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரத்தநாடு மற்றும் ஈச்சங்கோட்டையில் இருக்கக்கூடிய பண்ணைகளில் இதைப் பரீட்சார்த்தமாகச் செயல்படுத்துவதற்குத் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை ஏற்று, நமது துறையின் மூலமாகவோ அல்லது கால்நடைப் பல்கலைக்கழகத்தின் மூலமாகவோ, அந்த இரண்டு பண்ணைகளிலும் ஆராய்ச்சி நிலையங்களை அமைத்து ஆடுகள் ஆராய்ச்சிக்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஆடு வளர்ப்பில் மேச்சேரி இன ஆடுகள் மிகப் பிரசித்தி பெற்றவை என்று எல்லோராலும் பாராட்டப்பட்டு வருகின்றன. அங்கே ஆடு ஆராய்ச்சி மையமும் இருந்து வருகிறது. அதனாலே, சிறு, குறு விவசாயிகளுக்கும் ஆடு வளர்ப்போருக்கும் வேண்டிய அளவுக்குப் பயன்கள் கிடைப்பதில்லை என்ற ஒரு பெரிய குறை இருந்து வருகிறது. உதாரணத்திற்கு, மேட்டூர் அணையைச் சுற்றியிருக்கிற கொளத்தூர் ஒன்றியம், மேச்சேரி ஒன்றியம், நங்கவல்லி ஒன்றியம் போன்ற பகுதிகளுக்குப் பாசன வசதி கிடைப்பதில்லை. அங்கே மானாவாரிப் பயிராக அரை ஏக்கர், ஒரு ஏக்கரில் பயிர் செய்யக்கூடிய விவசாயிகள், ஆடு வளர்ப்பிலே அதிக அக்கறை செலுத்தக்கூடிய நிலையிலே இருக்கிறார்கள். இந்தச் சாதாரண ஏழை விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் ஆடு வளர்ப்பின்மூலம் அதிக வருமானம் வரும் என்று எண்ணுகிறார்கள்.

ஆறு மாதங்களுக்கு முன்புகூட நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி, சேலத்திலேயிருக்கிற செந்தாரப்பட்டி துளசி ஆட்டுப்

பண்ணை மற்றும் ஓசூர், ஈரோடு போன்ற பகுதிகளிலேயிருந்து கால்நடை வல்லுநர்களை அழைத்து வந்து நாங்கள் ஒரு கருத்தரங்கை நடத்தினோம். அந்தக் கருத்தரங்கிலே கால்நடை வல்லுநர்கள், கால்நடை மருத்துவக் கல்லூரியிலேயிருந்து வந்தவர்கள், அந்தப் பகுதி ஆடு வளர்ச்சிக்கு ஏற்புடையதாக இருக்கிறது, கலப்பின ஆடுகளை வளர்த்தால் அந்தப் பகுதி விவசாயிகள் வாழ்க்கையிலே வளம்பெறும் சூழ்நிலை இருக்கிறது என்று சொன்னார்கள். போயர் ஆடு, தலைச்சேரி ஆடு, ஜமுனாபாரி ஆடு, இராமநாதபுரம் வெள்ளை ஆடு, மேச்சேரி இன ஆடுகளையெல்லாம் அந்தப் பகுதியிலே வளர்த்து விவசாயிகளுடைய வருமானத்தைப் பெருக்க வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினாலே, துறையின் வாயிலாக ஆட்டுக் குட்டி கொடுப்பதற்கு, அதுவும் மானிய விலையில் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று மாண்புமிகு அமைச்சரிடம் அறிய விரும்புகிறேன். அதோடு, அந்தப் பகுதிக்கு முக்கியத்துவம் கொடுக்கிற வகையில் அந்த மேச்சேரி இன ஆடு ஆராய்ச்சிப் பண்ணையை மேம்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை விவசாயிகளுக்கு, செம்மறி ஆடு வளர்ப்பு விவசாயத்திற்கு மாற்றாக நிலைத்த வருமானம் தரக்கூடிய வகையில் மிகவும் பிரபலம் அடைந்துள்ளது. ஆட்டு இனங்களில் செம்மறியாட்டு இனம் 41 சதவீதத்திலும், அவற்றில் கலப்பினம் மற்றும் உள்நாட்டினம் முறையே 14 சதவீதமாகவும், 86 சதவீதமாகவும் உள்ளது எனக் கணக்கிடப்பட்டுள்ளது. மொத்த ஆட்டினக் கணக்கெடுப்பில் 40 சதவீதம் ஈரோடு, திருநெல்வேலி, சேலம், விருதுநகர், வேலூர் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் உள்ளது.

புதிய பண்ணைக் கொள்கையின்படி கீழ்வரும் இனங்களில் இத்துறையினால் பண்ணைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. செட்டிநாடு மாவட்ட கால்நடைப் பண்ணையில் ஜமுனாபாரி வெள்ளாட்டு இனமும், இராமநாதபுரம் வெள்ளைச் செம்மறியாட்டு இனமும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. புதுக்கோட்டை மாவட்டக் கால்நடைப் பண்ணையில் ஜமுனாபாரி வெள்ளாட்டு இனமும், இராமநாதபுரம் வெள்ளைச் செம்மறியாட்டு இனமும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஓசூர் கால்நடைப் பண்ணையில் கொடியாடு மற்றும் தலைச்சேரி வெள்ளாட்டு இனமும், மேச்சேரி

2009 ஜூலை 3]

மற்றும் திருச்சி கறுப்பு செம்மறியாட்டு இனமும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. சாத்தூர் ஆட்டுப் பண்ணையில் கன்னி என்ற வெள்ளாட்டு இனமும் வேம்பூர் என்ற செம்மறியாட்டு இனமும் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

முற்பகல் 9-50

முகுந்தராயபுரம் ஆட்டுப் பண்ணையில் சென்னை சிவப்பு என்ற செம்மறியாட்டு இனம் பராமரிக்கப்பட்டு வருகின்றது. சின்னசேலம் ஆட்டுப் பண்ணையில் தலைச்சேரி மற்றும் சேலம் கருப்பு வெள்ளாட்டு இனமும், மேச்சேரி மற்றும் சென்னை சிவப்பு இனமும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அபிஷேகப்பட்டியில் கீழ்க்கரிசல் என்ற செம்மறியாட்டு இனம் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இப்பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் தரமான கிடா மற்றும் பெட்டை ஆடுகள் உள்ளூர் ஆடுகளின் மரபுகளின் தரத்தினை உயர்த்தும்பொருட்டு இனப்பெருக்கத்திற்காகவும், உள்ளூர் விவசாயிகளுக்கும் விற்கப்படுகின்றன. 31-3-2009 அன்றைய நாளில் 97 கிடாக்கள், 1,427 பெட்டை ஆடுகள், 676 ஆட்டுக் குட்டிகள் மேற்கண்ட பண்ணைகளில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. 2008-2009 ஆம் ஆண்டில் 588 செம்மறி ஆடுகள் விவசாயிகளுக்கு விற்கப்பட்டிருக்கின்றன. உறுப்பினர் சொன்ன சேலம் மாவட்டம், மேட்டூர், பொத்தனேரியில் உள்ள கால்நடைப் பண்ணை ஏறத்தாழ 162.5 ஏக்கரில் அமைந்துள்ளது. அதிலே, மேச்சேரி இன ஆடுகள் 436-ம், தலைச்சேரி இனம் 66-ம், சேலம் கறுப்பு வெள்ளாட்டு இனம் 97-ம், சேலம் கறுப்பு தலைச்சேரி கலப்பினம் 54-ம் மொத்தம் 653 ஆடுகள் உள்ளன. விவசாயிகளுக்கு இதுவரை 1,620 குட்டிகளை மானிய விலையில் அந்தப் பண்ணையிலிருந்து கொடுத்திருக்கிறோம். இன்றுகூட விவசாயப் பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த துணை வேந்தர் அவர்கள் அந்தப் பண்ணையை மேம்படுத்துவதற்காக ஆய்வுகளை மேற்கொள்ள அங்கு சென்றிருக்கிறார்கள் என்ற செய்தியையும் நான் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி.

திரு. து. அமரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கால்நடைகளின் எண்ணிக்கை குறைந்துகொண்டே வருகின்ற காரணத்தினால், அசைவப் பிரியர்களுக்கு மிகப் பெரிய ஏமாற்றம் ஏற்படுகிறது. கிராமங்களில், கிலோ ரூ.50/-, ரூ.60/- என்று

[2009 ஜூலை 3

விற்ற mutton-ஐ இன்றைக்கு கிலோ ரூ.250/-, ரூ.300/- என்று விற்கின்றார்கள். அப்படி என்றால், நகரத்தில் அது இரு மடங்காக ஆகும். அந்தக் காலத்தில் மணப்பாறை மாடு, காங்கேயம் காளை, பூரணி மாடு என்று கிராமங்களில் மிகப் பெரிய அளவில் உயர்ந்த ஜாதி மாடுகள் இருந்தன. இன்றைக்கு அந்த இனங்கள் அழிந்துகொண்டு வருகின்றன. ஆகவே, அந்த இனங்களைப் பாதுகாப்பதற்காகத் தனித் திட்டம் தீட்டி, இதற்காகப் பண்ணைகள் அமைத்து, கால்நடைகளை அதிக அளவில் உற்பத்தி செய்து பாதுகாக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தொழிற்சாலைகள் அதிகமாகப் பெருகி வருகின்ற காரணத்தினால், மேய்ச்சல் தரை சுருங்கிக்கொண்டே வருகின்றது. ஆகவே, ஆடுகள், மாடுகள் வளர்ப்பதற்கான சூழ்நிலை குறைந்துகொண்டே வருகிறது. இருந்தாலும்கூட, இந்தியாவைப் பொறுத்தவரையிலே, நாம் மாடுகள், ஆடுகள் வளர்ப்பதில் எட்டாவது இடத்திலும், பால் உற்பத்தியைப் பெருக்குவதில் மூன்றாவது இடத்திலும், கோழிகள் வளர்ப்பதில் இரண்டாவது இடத்திலும் இருக்கின்றோம். ஆகவே, அந்தத் தொழில் மேன்மையாக வளர்ந்துகொண்டுதான் இருக்கின்றதே தவிர, தாங்கள் சொன்னதுபோல் அழிந்துவிடவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். வைத்திலிங்கம்.

திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரத்தநாட்டிலும், ஈச்சங்கோட்டையிலும் கால்நடைப் பண்ணைகள் இயங்கிக்கொண்டு வந்தன. அவற்றில் ஆயிரக்கணக்கான எருமை மாடுகள், பசு மாடுகள் இருந்தன. இன்றைக்கு அவற்றின் எண்ணிக்கை மிகவும் குறைந்துவிட்டது. அங்கே கோழிப் பண்ணையும் இருந்தது; அது இழுத்து மூடப்பட்டிருக்கின்றது. மீண்டும் கோழிப் பண்ணையினை அங்கே ஏற்படுத்தவும், குறைந்துள்ள எருமை மாடுகள், பசு மாடுகள் எண்ணிக்கையை அதிகப்படுத்தி, ஈச்சங்கோட்டை, ஒரத்தநாடு கால்நடைப் பண்ணைகளை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2009 ஜூலை 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரத்தநாடு மற்றும் ஈச்சங்கோட்டையில் உள்ள பண்ணைகளில் இப்போதும் நல்ல முறையில் ஆடுகளும், மாடுகளும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. எனினும், தவறுகள் இருந்தால் அவற்றை விரைவில் சரி செய்ய இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 83, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப், மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

83—

படகு சவாரி

***17882—திரு. ஞா. ஜாண் ஜோசப்:**

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தொகுதி, சிற்றாறு அணை, சிவலோகம் பகுதியில் படகு சவாரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விளவங்கோடு தொகுதி, சிற்றாறு அணை, சிவலோகம் பகுதியில் படகு சவாரியை வணிகரீதியாக இயக்குவதற்கான வாய்ப்புகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப்.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூமித் தாயின் மடிமீது தவழ்ந்து விளையாடும் நீர் அலைகள், அதிலே மூழ்கிக் குளிக்க முயலும்...